தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஅ	திருவள்ளுவர் யாண்டு ககஅச நந்தன—பங்குனி 1953—மார்ச்சு	மலர் ௰௨

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

நம் பொழில்.

திருவருள் நலத்தால் இம் மலருடன் நம் பொழில் 28-ஆவது துணர் நிரம்பிப் பொலிகின்றது.

நாம் இவ்வாண்டுத் தொடக்கத்தில் மிக ஆவலுடன் விரும்பி, எண்ணியிருந்தபடி இத் துணர் அத்துணைச் சிறப்பாக வெளிவந்துள்ளது என்று சொல்லமுடிய வில்லை. என்றாலும் அன்பர்கள் உதவிக்கேற்ப எம்மால் இயன்ற அளவு பணியாற்றி வந்தோம்; அன்பர்கள் குறைகளைப் பொறுத்து ஆதரித்து வந்தமைக்கு யாம் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையோம்.

நம் பொழில் அன்பர்கள் தாம் ஆற்றிவரும் பலதிறத்த நல்லுதவிகளை வளர்த்தும் பொழிலன்பர் தொகையில் பெருக்கியும் தமிழும் தமிழ் மக்களும் நாளும் நாளும் வளர்ந்தோங்க ஒல்லும் வகை எல்லாம் நல்லுதவிபுரிந்து எம்பணி சிறக்க துணைபுரிய வேண்டுமென்று பொழில் அன்பர்களை வேண்டிக்கொண்டுத் திருவருள் துணையை நாடி வேண்டுகின்றோம்.

மதிப்புரை.

திருவாசகம் திருவெம்பாவை கதிர்மணி விளக்கப் பேருரை.

தேனூறு தெய்வச் செந்தமிழ் மொழியில் அருளிய மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திற்குப் பேருரை காணும் முயற்சியில் மகிபாலன்பட்டி மகாமகோபாத்தியாய பண்டிதமணியவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகிய இருபகுதிகட்கும் பேருரை வரையப் பெற்று அவர்களால் வெளியிடப் பெற்றுள்ளது. இப்போது திருவெம்பாவைக்கும் விளக்கவுரை வெளிவந்துள்ளது. தமிழ் நாடும், தமிழ் மொழியும் உலகில் முன்னேறத் தக்கார்பலர் முயலுமிந் நாளில், இது போன்ற உரைகள் வெளிவருவது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், சமயத்துறைக்கும் பெரிதும் துணைபுரிவனவாகும்.

ஒரு நூலுக்கு உரைகாண வேண்டுமென்றால் அந் நூலாசிரியன் உளவழி நின்று, சிந்தித்து, எழுதுதல் வேண்டும். அவ்வாறு எழுதப்பெறும் உரையே சிறந்ததாகும். நம் பண்டிதமணியவர்கள் தமிழ்மொழியில் நுன்மாண் நுழைபுலமும், அழுந்திய சைவப் பற்றும் வாய்ந்த திருவுடையராவர். மேலும் எண்ணிறந்த சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், பல ஆண்டுகள் பேராசிரியராகத் தமிழ்ப் புலமை நடத்தியும் மிக்க அநுபவம் வாய்ந்தவராவர். ஆகவே நூலறிவோடு அநுபவ அறிவும் சேர்ந்து இவ்வுரையினைப் பெரிதும் சிறப்பிக்கின்றன. இதற்கு வேண்டிய எடுத்துக் காட்டுகள் நூலெங்கணுமுள்ளன.

இவ் வுரையால் தமிழ் மொழியின் வளமும், திண்மையும் சமயத்துறைப் பற்றிய நுண்மையான பலவகைக் கருத்துக்களும் தெள்ளிதின் அறியலாம். திருவாசகத்தில் எஞ்சிய பகுதிகட்கு உரை வகுத்தும் இன்னும் பிறவகையில் தமிழுக்கும், சமயத்திற்கும் தொண்டுகள் பல செய்தும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கண்ணீரிலே கவலைச் சித்திரம்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

கும்ப கருணன்.

இடம் : பறந்தலைக்களம். **காலம் :** நண்பகல்.

அண்ணலோ என்னின்
அரும்பொருள் நிறைந்த ஆயிரம் மறையும்
கற்றுணர் அறிஞர் ஆயினும் அன்னோர்
தீச்செயல் புரிதல் அறனோ? அன்றே
பிறர்மனைச் சிறைதான் பாவமும் பழியும்
பயக்கும் என்பது அறியார் கொல்லோ!
நங்குடிப் பிறப்பிற் குரித்திஃ தாமோ?
அலகில் கற்புடைத் தேவி சீதையை
வல்லோன் பால்விடல் வசையன் றிசையே,
அன்றெனின் அழிவுறும் புலத்தியன் மரபே.
வானும் வையமும் வளர்புகழ பொன்னும்
அறந்தனைக் கொள்ளும் அறிஞர் தமமை
மறந்தனைக் கொள்ளும மாக்கள் வென்றி
எய்தல் யாங்ஙனம் இயலுமோ என்றே
இவையெம் மண்ணல் இதயம் கொள்ளாரோ?
யானே,
அரக்கர் தன்மை அழியப் பகைகடிந்து
அறநெறி யொழுக மறநெறி போக்கித்
தூங்காத் தூக்கம் தூங்கி யின்புற
அமரர் வாழ்வை அடைய எண்ணுவல்.
அண்ணல்,
விரும்பிய வாறே விதியும் என்னை
பிடர்பிடித் துந்தச் செருக்களத் துற்றனன்.
போரினுக் கஞ்சிப் புறப்பவன் யானோ?
இந்திரன் களிற்றினை யெளிதினிற் சுழற்றினென்
கண்ணுதற் சூலம் கையினில் எனினும்
அறங்கொடு நின்ற அமரில் மறங்கொடு
அரக்கியல் தோன்ற ஆற்றின் நாமே
இறத்தல் திண்ணம எனினும் எதிர்ப்போர்
யாவரே யாயினும் இரவிமுன் பனிபோல்
கடிதினில் அழிந்து கரத்தல் உறுதி.
ஆதலும் போதலும் ஆகூழ் அல்லூழ்
நெறியின வாமது நினையின் இயற்கையால்.
ஆங்குத் தோன்றுவன் எம்விபீ டணன்கொல்!
நான்முகன் வரத்தால் நன்னெறிக் கொண்டோய்!
இத்தகைப் பேதைமை எவ்வா றுற்றனை?
களிப்பெனு மாபெருங் கடலுற் றனைகொல்.
என்றெண் ணினையோ! என்பின் னுற்றோய்
புலத்தியன் மரபு பொலிவுறும் நின்னால்
என்றுட் கொண்டேன். எண்ணம் பாழ்த்தன.
குலப்பிறப் பழிக்கும் கோடரிக் காம்பென

உடன்பிறப் பொழிக்க உதித்தோன் நீயே!
அறநூல் கற்ற அறிஞனும் நீயே!
நல்லுயிர்க் கஞ்சி நம்முடன் பிறந்தான்
பக்கம் நீங்கிப் பகைப்பால் அடைக்கலம்
விரும்பினை நிற்றி! யாம் விளைத்ததென்னோ?
நம்முடன் பிறந்தோர்க் குற்ற துன்பம்
நமக்கென் றன்றோ கருதல் வேண்டும்.
அவன்றுயர் உறுங்கால் அகன்றே நீத்தல்
நன்றோ! இஃது. நன்றோ! கூறாய்!
அறநூல் தனக்கும் அழகிதோ! கூறாய்!
இரும்பே ரன்பின் இளவலும் நீயே!
நம்பகை இருவர் அல்லர்! நீயே!
நீயிவ் வண்ணம் நிகழ்த்தல் நேரிதோ!
முடிந்த வாழ்க்கை முக்குணப் போரே!
அண்ணல் புரிந்தவத் தீத்தொழிற் பொருட்டு
கெடுவை! நினக்குறு கேடென் கொல்லொ!
அன்னோன் அத்தொழி லகலச் செய்தல்
அவன்பின் னுற்ற நங்கடன் அன்றோ!
நல்லாண் மையே நலம்பெறு மொருவன்
இல்லின் ஆண்மை இயற்றல் அன்றோ!
இங்ஙனே நமக்கு இயலா தாயின்
அவன்முன் இன்னுயிர் அகற்றல் நன்றே.
அஃதொழித் தின்னுயிர் ஓம்புதல் வசையே.
அமரரை வென்ற அரும்புகழ் அண்ணல்
தம்பியர் இருக்கத் தமியராய் இறத்தல்
அறனோ! அன்றி நெறியோ! அன்றே
உலகினிற் கூடி உதித்தோம் இன்புற
இனியெப் பிறப்பில் இயலுமோ! அறியேன்!
நன்றிகொன் றனையென நானிலத் துள்ளோர்
தூற்றுவ துண்மை தூயோய் நின்னை
என்னே தனக்குத் தெவ்வா னோர்பால்
அடைக்கலம் புக்குயிர் வாழ்தலின் இழிவு
அரும்பெறல் உலகில் ஆயின் இல்லை.
இகலுடை யோர்பால் இனிதின் அடைந்து
இழிதொழில் இயற்றல் அன்றிநம் அண்ணல்
முன்னிக் காண இன்னுயிர் துறத்தல்
சிறந்தது. மற்றுஞ் செஞ்சோற் றுக்கடன்
உணர்ந்தனை. கொண்மதி. உறுபொருள் உரைத்தேன்.
மாந்தர் சிறப்பு நாணுடன் வாழ்தல்.
பிறர்பழி கூற வொழுகினை தீநெறி.
வியன்ஞா லம்பெற நின்போல் விரும்பார்
சிறந்தோர் ஏமம் நாணெனக் கொள்வோர்.
திரிதல் இன்மை குடிப்பிறந் தோர்க்கு
இன்றி யமையாக் குணமென உரைப்பர்.
தன்மையிற் குறைந்தன தகவில செய்தனை.
மனநிலை கூறி மாழ்கினன்.
அகத்துயர் கொள்ளல், என் அன்புடை இளவலே!

ஓவியக்கலை.

வித்துவான் திரு சி. கோவிந்தராசன், தலைமைத் தமிழாசிரியர்,
திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர்
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி, கரந்தை.

அழகுணர்ச்சியும் கற்பனைத் திறனும் ஒருங்கே மிளிர்ந்து விளக்கமுற நிற்பதே 'கலை' எனப்படும். கலையுணர்ச்சிகள் மக்களின் வாழ்விற்கேற்புடைத்தாய் பல துறைகளிலும் அமைந்துள்ளன. தனது கற்பனையின் உயர்வை துகிலிகை கொண்டு வண்ணமிட்டெழுதிக் காட்டியும், சிற்றுளி கொண்டு கற்களில் செதுக்கிக் காட்டியும் வந்தனவே. ஓவியக் கலையும் சிற்பக்கலையுமாம். இவ்விரண்டும் இரண்டு கண்ணெனத்திணைந்தே வரும் கலையாயினும், கருத்துக்கு விருந்தாய் அழகிற்கு இலக்காய் அமைந்து விளங்குவது ஓவியக் கலையேயாம். உலகில் காணப்படும் பொருள்களையும், கற்பனை செய்யப்படும் காட்சிகளையும், நுண்ணுணர்வால் மனத்தகத்தே உருவாக்கி வண்ணங்களைக் கொண்டு துகிலிகையின் வழியே சிறப்புறச் செய்வது இக்கலையேயாம். இக்கலை மக்களின் ஒவ்வொரு செயலிலும் மிளிருகின்றது.

ஒருவன் தன்னைப் புனைந்து அழகுபடுத்திக் கொள்ளுதலும், தமது இல்லத்தினை வாழ்க்கைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளுதலும் ஓவியக் கலையின் திறனென்றே கூறலாம்.

மனிதன் தோன்றிய காலத்திலேயே ஓவியக்கலையும் உடன் தோன்றி நின்றது. ஆதி மனிதன் தனது கருத்தினை மற்றொருவனுக்கு ஒலிக்குறிப்பாலும், சைகையாலும் அறிவித்தான். இம் முயற்சி வரிவடிவுபெற்ற காலமே ஓவியம் தோன்றிய காலமெனக் கூறலாம். கற்கால மனிதன் விலங்குகளின் வடிவங்களையும், வேட்டையாடும் காட்சிகளையும் தான் வாழ்ந்துவந்த குகைகளின் சுவர்களில், செம்மையும் கருமையுமாய் ஆற்றோரங்களில் கிடைத்த மண்ணினைக்கொண்டு எழுதித் தனது ஓவியக் கலையார்வத்தை ஒருவாறாகக் காட்டி மகிழ்ந்தான்.

ஓவியமும் சிற்பமும் உண்டாக்குபவனது உளப்பண்பினை ஒட்டியே உருவாகும் என்பது கலைத்தத்துவம். நாளடைவில் நாகரிகத்தில் உலகிலேயே முதலாவதாக முன்னேறிய தமிழன், இயற்கை இன்பத்தோடு செயற்கையிலும் இவ் வழியே உயர்ந்திருந்தானென்பது ஒருதலை.

பண்டைக்காலத் தமிழகத்தின் சிறப்பிற் கங்கமாய புகார் நகரின்கண், வானளாவி நின்ற மாடங்கள் வண்ணமிட்டு நின்றன வென்றும், ஆடை யணிகள் ஓவியத்தால் அழகு செய்யப்பட்டிருந்தனவென்றும், சிலம்பும் மேகலையும் சிறப்புறக் கூறியுள்ளன.

பெண்களைப் புனைந்து அழகுசெய்யும் பணி மகளை 'வண்ணமகள்' என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. அரச மகளிர்க்குக் கண்களில் மையெழுதி, சந்தனக் குழம்பால் உடல் முழுவதும் ஓவியமிட்டு, செம்பஞ்சுக் குழம்பால் பாதங்களில் படந் தீட்டி அழகு செய்வதே வண்ண மகளின் பணியாகும். இதனால் பண்டைத் தமிழ் மக்களிடத்தே புனைந்தழகு செய்யும் துறைகளில் ஓவியம் ஒளிர்ந்தது புலனாகின்றது.

பரத நூல் வல்லார் பழகிய மெய்ப்பாட்டுத்திறனனைத்தும் ஓவியமேயாம். நாடகக் கணிகையாகிய மாதவி ஓவியக்கலையிலும் உயர்ந்தவள் என்பதை,

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரை நூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை"

என்னும் மணிமேகலையின் அடிகள் உணர்த்துகின்றன. இவ்வடிகளிலிருந்து மாதவி ஓவியச் செந்நூல் உணர்ந்தே சிறந்திருந்தாளென்பது புலனாகின்றது. அக் காலத்தே ஓவியத்திற்கென்றொரு நூல் தமிழகத்திற்றிகழ்ந்ததென்பதும் அதனையே கூத்தில் வல்ல மாதவி கற்றுத் தேர்ந்திருந்தனள் என்பதும் விளங்காநிற்கின்றன. இக்கால் அப் பெரியவரிய நூல் யாண்டுளதோ! எங்ஙனை எய்தியதோ! அந்தோ, அறியேம்!

மற்றும், காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த உவவனத்தை வருணிக்கு மிடத்தும்

"எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்"

என்று மேகலையின்கண் மேலும் ஓவியம் மேன்மையடைகின்றது. பன்னிற மலர்கள் நிறைந்த மரங்கள் செறிந்த அவ்வுவவனம், சிறந்த ஓவியப் புலவனொருவன் எழுதிய வண்ணத் திரைச்சீலையை விரித்து வைத்ததைப் போன்றிருந்தது. என்று விளக்குவதே அவ்வடிகளாம்.

ஓவியக்கலை வல்லுநர் இலக்கியப் பண்புடன் கற்பனைத் திறனும் ஒருங்கே வாய்க்கப்பெறின் அவர்தம் கைத்திறன் உயிரோவியமாகத் திகழுவது உண்மை. இவ் வுண்மையினைப் பண்டை நம் ஓவியப் புலவராய பெருமக்கள் நன்கறிந்திருந்தன ரென்பதை, சித்தன்னவாசல் குகைச்சித்திரங்களும், தஞ்சைப் பெரியகோயில் கருவறைச் சித்திரங்களும் உணர்த்துவன வாயுள்ளன. ஆயிரமாண்டுகட்கு மேலாகியும் அவை இன்று வண்ணமிட்டதைப் போன்று காட்சியளிக்கின்றன.

சித்தன்னவாசல் குகையின் கூரையில் எழுதப்பட்டுள்ளது ஒரு தாமரைக்குளம். அன்றலர்ந்த செந்தாமரை மலர்கள் அங்குமிங்கும் நிற்கின்றன. நாளை மலர விருக்கும் நன்முகைகளும் நன்கமைந்துள்ளன. இலைகள் யாவும் இயற்கையே போன்று எழிலோடு விளங்குகின்றன. அவ்விலைகளின் மீது தெறித்துள்ளதைப்போன்று எழுதப்பட்ட நீர்த்துளிகள் உண்மையாகவே உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. ஒரு புறம் யானைகள் நீராடுகின்றன. மற்றொருபுறம் எருமைகள் நின்று தாமரை இதழ்களைச் சுவைக்கின்றன. இடை இடையே வண்ணத்

தோடு கூடிய அன்னங்களும், சின்னஞ் சிறிய மீன்களும் அங்குமிங்கும் காட்சியளிக்கின்றன. ஒருபால் சமண ரிருவர் கையில் தாமரை மலர்களைப் பறித்துத் தாங்கி யுள்ளனர். ஒருபால் இடக்கையில் பூக்கூடை கொண்டு வலக்கையால் மலர் பறிக்கின்ருர் ஒருவர். இத்தகு காட்சிகள் உயிரோவியமாகவே திகழுகின்றன. மற்றும், உணர்ச்சியின் உயர்வை உள்ளவாறு காட்டும் ஓவியத்தினை தஞ்சைப் பெரியகோவிலின் கருவறை வடபாற் சுவற்றிற் காணலாம்.

விரிசடைக் கடவுள் திரிபுரமெரித்த தோற்றமே அது. தேவ கணங்கள் புடைசூழ, விநாயர் முருகன் அருகிருப்ப, சிவனுர் எட்டுக் கரங்களுடன் தமது இரதத்தின் மீது வீற்றிருந்து நெற்றிக்கண்ணைத் திறந்து நோக்குகிருர்; அசுரர்கள் விண்ணினின்றும் உயிரற்று வீழ்கின்றனர்; இன்னும் பலர் தங்கள் பெண்களுடன் அலங்கோலமாக ஓடுகின்றனர்; சில பெண்கள் தம் வீரக் கணவரது கழுத் தைச் சுற்றிக்கொண்டு அச்சத்தோடு தொங்குகின்றனர்; அவ் வாடவரது முகத்தில் வீரவுணர்ச்சியும் அப்படியே தவழ்கின்றது. சிவனது தோற்றத்தில் மறக்கருணை சிறந்து விளங்குகின்றது. வானக்காட்சியும், தேரும் வாகுடன் தோன்றுகின்றன. இவ் வோவியத்தின் ஒவ்வொரு சிறு பகுதியும் கண்டு இன்புறத் தக்கவை.

இவ்வாறு காவிய உணர்ச்சியோடு ஓவியத் திறனையும் ஒருங்கே ஓவியமாக்கிய தன்மைதான் என்னே! இத்தகைய ஓவியங்களை எழுதியதினுலன்ருே இன்று தமிழ் நாடும் ஓவியக் கலையில் உயர்வடைந்து காணப்படுகின்றது.

மற்றும், தமிழ் மக்களின் சிறந்த அறிவினைச் சிற்பக் கலையில் காணலாம். உயர்ந்த பண்பை ஓவியக்கலையில் காணலாம். இக் கருத்தினைத் தமிழ் நாடெங்கும் நிலவும் திருக்கோயில்களத்துணையும் நின்று விளக்குவனவாய் அமைந்துள்ளன.

திருமுருகாற்றுப் படை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் உஅ, மலர் ௰க, பக்கம் 338.)

இறையின் விளை நிலமாகிய உள்ளமும் அதன் பாலுள்ள விளை பொருளும் யாவருக்கும் பொதுவாகலின், உள்ளமிசை குடிகொண்ட பொருளை அவரவர் உள்ளத்திலேயே கண்டு கூடலாம். அகத்தே பரம் பொருளைக் கண்டு கூடின், புறப் பொருள்களிலும், இயற்கை அறம் துணைபுரிய, அம் மெய்ப் பொருளினைக் காண இயலும். அதுபோது உடல்மிசை உயிரென, இயற்கைப் பொருள்களில் இறை கரந் தெங்கும் பரந்திருக்கும் நிலை விளங்கும். உணர் வரிய இறை நிலையினை யோகக் காட்சியான் நன்குணர்ந்த நக்கீரர், வாழ்விற் ஊன்று கோலாம் இந் நூலில், புறப் பொருள்களில் நிலவியிருக்கும் இறைவன் மாட்டு அன்பு கொள்ளும் பண்பினை வளர்க்க, அறிவு வளர்ச்சி பற்றிச் செல்லும் புறப் பொருட் கூறுகளின் தத்துவ உண்மையினையும், சிறப்பினையும் அழகினையும், மக்களை உயர்த்தவல்ல நல்ல கற்பனைக் கருத்துகளில் மிக மிக நுண்ணியதாய்ப் பெய்து வைத்து இன்புறுத்துவர். அறிவு ஐம்புலன்களுடன் கலந்தே இறை யுணர்வில் படிய வேண்டி, நக்கீரர் இறையன்புணர்த்த, உலகியற்கைப் பொருள்களி லுள்ள அழகியலைப் பருமையுற விரித்துக் கூறிப்பின் நுண்மை யுற இறை யறிவைப் பெறும் ஆறினையும் நிறுவி விளங்க வைக்கும் மாண்பு இறை உண்மையினை மெய்ப்பிக்கும் நன் முறை யாகும். இம் முறைக் கேற்ப, உணர்வு நிலையைப்பற்றி பாட்டிசைக்கும் நல்லிசைப் புலவர் நக்கீரர் இறைவனது தன்மையினை ஆற்றுப் படையின் கண்ணகத்தே யடக்கிய தோடமையாது, தம் உளப் பான்மைக்கும், உள்ளறிவிற்கும் இணக்கமாக இயற்கையை இருக்க வேண்டியவாறு பொருத்த முண்மையால் இசைப்பதையும் மேற்கொண்டு இனிமையூட்டு

வாராயினர். இதனுன் ஆற்றுப் படையின்கண் இயற்கையின் மாண்பும், இறையின் மாண்பும், இயற்கை இறை மாண்பும் ஒருங்கு சேர்ந்து பொலிவுற்று நிற்கும் பெருமையுற்றது. ஆற்றுப்படை கிளக்கும் இயற்கைப் பொருட்கண், அறிவு செறிந்து நிற்குமாறு, நக்கீரர் விளங்க வைத்தலால், அவ் வியற்கைப் பொருளைக் கொண்டே இறை யுருவை நெஞ் சென்னும் உட்கண்ணுல் கண்டு கண்டே இறை யுண்மையினை நுனித் துணர்தல் வேண்டும். இறை மாட்சியினை அறிவதும், இறையின் காட்சியினைப் பெறுவதும், வாழுமுயிர்களின் மெய்ம் முயற்சியினைப் பொறுத்து நிற்றலான், நக்கீரர், அம் முயற்சியினை, அறிவாலும், அன்பாலும், இன்பாலும் முறைப் படுத்தும் அருமை உளங் கொளற் பாற்று.

வாழுமுயிர்கள் தங் கடமை யுணர்வால் இறை யுறவினைப் பெற, இறை ஐம்பெரும் பொருள்களில் ஊடுருவி நின்று ஞாயிற்றின் வழியால்பல்லுயிர்கட்குப் பலதிறத்தானுந் துணை புரிவதை, ‘உலகம் உவப்பவலன் ஏர் புதிரிதரு, பலர் புகழ் ஞாயிறு’ என முதற்கண் நக்கீரர் அறிவுறுத்தி, ஞாயிற் ெருளி வாழ்வின் நடைமுறைக்குரிய துறையின் எளிய வழி யினை விளக்க வல்லதாயிருப்பதை உணர்த்து வாராயினுர் இறைபால் உறவு கூட்டும் ஞாயிற்ெருளியினைக் கண்கொண்டு காண, கண் வேறு ஒளி வேறென்பது நிதர்சனம். இருளுள்ள மட்டும் பெரியதொரு வெளியும் பொருளும் புலப்படு மாறில்லை. ஞாயிற்றின் ஒளி வாயிலாக, பரவெளி முழுவதுஉம் ஒளி மயமாக விளங்க, மனத்தால் அதனை நினைத்த ஞான்று மனமே ஒளியாகி, ஒளியே சுகமாகத் தோன்றும். தன்னை வெளியாக இடையருது உன்னிப்பார்க்க, வெளியே ஒளியாக வும், அந்த ஒளியே அறிவாகவும், அறிவே சுக வடிவாகவும் காட்சிதர, உயிர் எஞ்ஞான்றும் துக்க முறுவதில்லை. அதற்கு ஓதற்கரிய அகண்டகாரநிலை எளிதில் பொருளாகும். எனவே பெரு வாழ்வளிக்கும் இறைக் காட்சியைப் பெறுவிக்க, நினைப் பின் வடிவாய்ப் பிறந்து கொண்டிருக்கும் மனத்தை அறிவு வடிவமாக மாற்றிப் பிறக்கும் வகையில் மக்களுயிர்களின்

அன்புடைய மெய்ம்மைக் கடமை எத்தகையவாறு பொருத்து நிற்கின்ற தென்பதை நக்கீரர் அருளின்ப மேலீட்டால் திருமுருகாற்றுப் படையில் கூறியதை யுணர முயல்வதே அறிவுடைமை.

இறையின் அருட்டுணையினை நாடி வாழுமுயிர்கள், தங் கடமையுணர்வால் பெறும் இன்பத்தின் வழி, உள்ளம் அறிவின் ஆற்றுகத் திகழுங்காலே, உள்ளத்தே இயங்கும் இறைவனருளே வாழ்வை நடத்துமென்ற உணர்வு முறுகியெழற்கு, உலகு, அறிவு முதலாயவற்றின் தன்மையினை வகுத்துணர்த்தும் நக்கீரர், இனிய விரகிரண்டும் எடுத்துக்காட்டுவராயினர். ஒன்று, உடல் உயிர் மனமாகிய மூன்றிற்கும் நலம் தரும் முத்தீவளர்க்கும் செல்வத்தை ஓம்பல் ஆகும் (மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வம்'). மற்றொன்று, ஆறெழுத் தடக்கிய அறுமறைக்கேள்வியினை நாவியன் மருங்கில் நவிலப்பாடுதல் ஆகும். முன்னைய தால் வாழ்வு மாசற்று பேரின்பச் செல்வநிலை யுறுதல் ஒருதலை. பின்னையதால், இறைப்பொருளை நாட விடாது, மற்றைய பொய்ப் பொருள்களின் கண் திகைப்பிக்கும் வழி வந்தெய்திய பழைய தீவினை தொடர்ந்து வந்து தாக்காமல், உயிர் தன்னைக் காத்துக்கொள்ளும் முறை துணிபாம். உடலகத்தே, மூலாதாரத்தில் உறங்கும் சிற்கனலை எழுப்பி, அறுவகைத் தெய்வப்படிகளாம் சக்கரங்களூடு பிரணவ வுச்சியில் முச்சுடராய் ஒளிர மேலேற்றலே தீவளர் செல்வத்தின் உண்மைத் தத்துவமாகும்.

மூத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியு
ளத்தியு ரியரனு வதறிகிலர்
சத்தி கருதியதாம் பலதேவரு
மத்தியி னுள்ளெழுந் தன்றுகொலையே

(திருமந்திரம்)

என்பதைத்துருவி ஆய, பெருஞ்சுடர்காலும் மூத்தீயினை ஓம்பி வருவதாலாய மேன்மை இனிது விளங்கும். தீவளர் செல்வத்துத் தனி முதல்வன், உள்ளத்தும் உலகத்தும் விளங்

கும் இறைவனுதலான், அவனை அறுவகைப் படிகளைக் குறிக் கும் ஆறெழுத்தடக்கிய அறுமறைக் கேள்வியால் பாடி காடும் உள்ளம், அன்பழகாய் மலர்ந்து, அருண் மணம் எங்கும் கமழவும் அறிவுத்தேன் ததும்பவும், இறையின் வீறு பெறும். சுழலும் ஐம் பொறிகளின் கலைகளை இறை நிலையோடு ஒன்று சேர்க்கும் முறையினைக் கிளத்தலே அருமறைகளின் கருத் தாதல் பெறப்படும்.

ஆக மதத்தன வைந்து களிறுள
வாக மதத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை தாமு மிளைத்தபின்
யோகு திருந்துத லொன்றறி யோமே

எனவும்

பாய்ந் தன பூதங்களைந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்து கோளானந்த மென்னு மருள் செய்யில்
வேயந்து கொண்மேலை விதியது தானே

என்றும் திருமந்திரம் கிளந் தோதியதைப் பெரிதும் அறிந்து இன்புறற்பால தாயிருக்கின்றது. இவ்வாறு உள்ளத் துணர்வே உண்மையை விளக்குமுகத்தான், ஆற்றுப் படை யின்கண், நக்கீரர், உயிர் நிலையையும், தக்க நெறிவகையில் உயிர் எளிதே எய்துதற்குரிய இறை நிலையினையும் உணர்த் திக் காட்டியவழி, இறையொடு உயிர் கலந்து திருவருள் மய மாய் நிற்கும் முறை தெளிவாயிற்றென்க. இதனுன் மக்க ளுயிர்கள், தம் உடலம், வாய், மூக்கு, செவி, கண் என்ற இவைகளை இறைபால் வைத்துப் பின் மெய்ஞ்ஞான வழி களால் அஞ்ஞான தத்துவங்களை ஒழித்து, ஞானவினைகளைச் செய்ய முற்படின் அன்னார் மண்ணுலகில் ஞான வாழ்க்கையை நடத்த இயலாததால், இறை அன்னவர்பாலே எதிர் சென்று எளியனாய் நின்று தன்பால் வருக வென்றருள் புரிவா ரென்பது தேற்றம். இப் பேருண்மையினை அறிவுறுத்தவே திருமுருகாற்றுப்படை எழுந்ததென்க.

இத் தெளி முறையினை மேற்கொண்டு, இறைக்காட்சிப் பெருமை, இறையறிவு, இறையன்பு, இறைக்கலப்பு உண்மை முதலியவற்றை இயல்போடு அறிந்து உணர்ந்து, இறையோடுறையும் சீரடியவர்பாலும், விழுத்தெய்வ முனிவரர்பாலும் பரிவுடைமையே, நல்வினைப் பேற்றிற்குரிய செழுநிலையின் விழுச் செல்வப் பெருக்குக்கு உரித்தாதல் பெறப்படும். கற்றாவின் தீம்பாலைப் பெறற்கு கன்றின் துணை எவ்வாறு இன்றியமையாததோ, அஃதேபோன்று, இறை யருளினை எய்துவதற்கு இறையடியவர் உறவும், இணக்கமும் துணையும் பெரிதும் வேண்டற்பாலது. நல்லியல்பு நற்செய்கைகளையுடைய அருட் பெரியாரது கூட்டுறவே பேரின்பமாகும். திருவருளுணர்வுடன் நெடிது வாழும் திருவாளரான பெரியோராதுறவால் சொலற்கரிய பயனெல்லாம் மக்கள் பெறுவரென்பதை இனிதுணர்ந்தே, ஆசிரியர் திருவள்ளுவனார் 'பெரியோரைத் துணை கோடல்' எனும் இயலை வகை தெரிந்து வகுத்தருளியதினை அறிந்து கொள்க. இக் கருத்தினைக் கொண்டே, நக்கீரர் திருவாவினன்குடி என்ற பாடி வீட்டின்கண் முருகன் வீற்றிருந்த காலத்தில் அவரது சீற்றத்தின் காரணமாய் இழந்த முத்தொழிலை முன்போற் பெறவேண்டி, குறையிரக்கச் செல்லும் தேவர், அவரது கடுஞ்சினம் தணிந்து கடிதே மாற, அருமுனிவர் குழாம் முன் செல்ல தாம்பின் சென்றனர், என நயப்பாடும் இனிமைப்பாடும் தோன்றக்கூறி, இறை அடியவர்தம் தலைமைப் பாடுற்ற தெய்வப் பண்பினைத் தெள்ளத் தெளிய விளங்கவைத்தது கருத்திருத்துதல் வேண்டும். தெய்வப் பெற்றி யுற்றார் தம் ஆணைவழி உலகியல் நடைபெறு மாதலின், தவத்திருவும், தவஞானச் சிறப்பும் பொருந்திய முனிவராதியல்பு இன்னது கொல்என நக்கீரர் அருளியதை உற்று நோக்க, உலக இயற்கையிலும், நடைமுறை வாழ்க்கையிலும் கடவுட் டன்மைக்கும், முதன்மை தரும் அன்னாரது மெய்ப்போக்கும், பாடாண் ஒழுக்கமும், அதனான் அருணிலைமேவப் பெறும் அவர்தம் விழுநிலையும் நன்கு தெளியப்படும்.

புலனழுக்கற்ற அருளொளியராய நக்கீரர் தம் அகத்தில் தோன்றியதை உளவியற்கை கொண்டு ஆற்றுப் படையின் கண் புறப்படுத்தினுலும், உள உணர்ச்சிக்கேற்ப, இயற்கை யழகை நுட்பமாய் அமைத்து உரைக்கும் உள்ளப் பழக் கத்தில் அன்னவரைப் போன்று செவ்விதாய்த் தேறிச் சிறந்த பழந் தமிழ்ப் புலவர்கள் ஒரு சிலரேயாவர். இத்தகைய உள்ளப் பாங்கு இறுதியில் உரையுணர்வற்ற அமைதியினிற் பேராது வைகும் நிலையினைப் பெறவைக்க, ஆழ்ந்தகன்ற பெரும் புலமையும் பொய்யா நாவு மெய்திய நக்கீரர், சொற் பொருட் கூற்றை துணிவிக்கும் முறையால், இனிமை, ஒளி, மலர்ச்சியாய எழுச்சியைத் தரும் பொருட்சுவையினையும் காட்டி மகிழ்விப்பாராயினர். புறப்பொருள் விரிவினை பெரும் பான்மையாக ஆற்றுப்படையின்கண், நக்கீரர் சிறப்பித் தாலும், சுவைபல பயக்கும் அவரது கருத்தை நன்காய்ந்து அளந்தறிந்து கோடற்கு 'மாட்டு' எனும் பொருள் கோள் முறையே சாலச் சிறந்த கருவியாகும்.

'அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருண்முடித்தந்தனர் உணரீத்தல்
மாட்டுஎன மொழிப பாட்டியல் வழக்கின்'

என்பது தொல்காப்பியம். 'இது மாட்டு எனும் உறுப்பு உணர்த்துகின்றது. பொருள் கொள்ளுங்கால், அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய் யினும் இருவகையானும் சென்று பொருள்முடியும் ஆற்றல் கொணர்ந்து உரைப்பச்செய்தலே மாட்டு என்னும் உறுப்பு என்று சொல்லுவார் செய்யுள் வழக்கின். இதுவும் நால் வகைப் பொருள்கோளன்றி வேறு புலவரது செய்கை. **** மாட்டுதல் என்பது கொளுத்துதல்'' என்று நுவலப்படுகின்ற குறிப்பினல் 'மாட்டு' என்னும் பொருள் கோள்முறை இனிது விளங்காநிற்கும். 'மாட்டு' என்பது, செய்யுளுறுப் புகள் முப்பத்து நான்கினுள் ஓர் உறுப்புமாகும். இது பல் வகையான் பரந்து விரிந்த தெளிபொருள் நுட்பங்களை ஒரு

சேரக்கொண்டு செல்வது. மாட்டுதல் கொளுத்துதல், சேர்த்தல், புணர்த்தல் என்பன ஒரு பொருளன. விளக்கமாக கூறப்புகின், பாட்டின் கண் பல அடிகளில் வந்துள்ள சொற்களை ஒருசேரத் திரட்டியும், தொடராக்கியும் பொருள் கொள்ளும் திறம் ஒருவகையாம். பிறிதொருமுறை, அகன்ற பொருள்களை ஒன்றுசேர்த்துப் பொருளறிதலாகும். மொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருளுரை கூறலுறுவது மொழி புணரியல்பேயாகும்.

'நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே'

எனத் தொல்காப்பியர் விதந்தோதிய ஒட்பத்தினை நன்கு நுனித்துணர்ந்து கொண்ட உரையாசிரியர் இளம்பூரணர், 'மொழிபுணரியல்பு என்பது நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என நான்கு வகையான் மொழிகள் தம்முள் புணருஞ் செய்யுளகத்து என்பது உணர்த்தியவாறு' எனத் தெளியவைத்தார். மொழிபுணரியல்பின் இலக்கண அமைப்பிற்கேற்ப, நச்சினார்க்கினியர் தம் திருமுருகாற்றுப்படை உரையில் 'கண்ணியன், மார்பினன் சென்னியனாகிய சேய் சேவடி படரும் உள்ளத்தோடே, செல்லுஞ் செலவை, நீ நயந்தனையாயின், இன்னேபெறுதி, தான்வந்தெய்தி, பெறலரும்பரிசில் நல்குவன், எனப் பல்வேறு அடிகளின் மொழிகளைக் கூட்டி பொருளுரை வகுத்தது மொழிபுணரியல்பாகுமன்றி மாட்டிலக்கணமாகாது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் மொழி புணரியலும் மாட்டும் ஒன்றெனக் கருதி மயங்கி உரை மலர்த்தினதினன், ஆற்றுப்படையின் பொருளுரை குழப்பமெய்தி, தெள்ளிதிற் புலப்படுமாறில்லை. என்னெனில், அவர் தம் உரையில் மயக்கமும் அயர்வுமுறும் படிக் கூறும் மாட்டிலக்கணப்பொருள் பொருத்த மின்மையெள நல்லிறை யிறுக்க, மாட்டிலக்கணத்தியலை தொல்காப்பியர் சொல்லதிகார எச்சவியலில் மொழி புணரியல்போடு கூறுது செய்யுளியலில் துணிந்து கூறிய நேர்மையினைக் கூர்ந்து நோக்கின், அதன் மாண்பு தெற்றெனப் புலப்படும். எனவே,

மாட்டிலக்கணப் பண்பின் நெறி நின்று, ஆற்றுப்படையின் உட்படையினை உணர, பயன் சுரக்கும் பருப் பொருள்களின் நுட்பமும், அகவுணர்வின் திறமும் எளிதாக விளங்கும்.

நக்கீரரது ஆற்றுப் படையின்வழி, நிலையின்றி திரிதரும் நமது மனவுணர்வை, அவரது அறிவு நிலையினைப் பற்றிச் செல்லும் புறப்பொருட் சிறப்பினிலே, சலிப்பு கொள்ளாத வாறு ஒருமுகப் படுத்தினால், பாட்டினிலே கருக்கொண்டு விளங்கும் முதற்பொருள் நமதறிவிற்குப் புலப்பட்டு நமது மனோபாவக வுணர்ச்சியினை வலியுறுத்தும். ஆகவே ஆற்றுப் படையின்கண் அழகாற் சிறந்து அகன்று நிற்கும் சார்புப் பொருள்களை மனவியற்கைக்குப் பொருந்துமாறு அணுகிய நிலையிற்கொண்டு, நக்கீரர் எடுத்துக்கொண்ட நுணுக்கமாய உட்கிடையினைத் திரட்டி, ஆற்றுப்படையின் உயிர்ப்பொருளி னிருப்பினைக் காண்குவம்.

மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்,
பெருந் தண்கண்ணி மிலைந்த சென்னியன்,
எய்யா நல்இசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
இன்னே பெறுதி நீமுன்னிய வினையே;
மாடம்மலி மறுகில் கூடற் குடவயின்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்; அதா அன்று
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதா அன்று
ஆவினன் குடி அசைதலும் உரியன்; அதா அன்று
ஏரகத்து உரைதலும் உரியன்; அதா அன்று
குன்று தோறாடலும் நின்றதன் பண்பே; அதா அன்று,
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்

சதுக்கமும் சந்தியும் புதுப்பூம் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துஉடை நிலையினும்
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியன்நகர்
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டுஆண்டு உறைதலும் அறிந்தஆறே;
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக்காண் தக
முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழு உப்பரவிக் கால்உற வணங்கி
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
போர்மிக பொருந! குரிசில்! எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி, ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின் அடி உள்ளிவந்தனன், நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமையோய்! எனக்
குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி,
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன், பெரும! நின்வண் புகழ் நயந்துஎன
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி,
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி! அறிவல் நின்வரவு! என
அன்பு உடை நன்மொழி அளைஇ, விளிவு இன்று
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறல் அரும் பரிசில் நல்குமதி
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

இப்பகுதியினையே ஆற்றுப்படையின் உட்கோளாகக் கொண்ட நக்கீரர், உலகியற் பொருள்களின் இயற்கை வனப்பில் படிந்து அதன் வழியே தம் நுண்ணறிவினைத் தோயவைக்குங்கால், அவ்வறிவிற் சிறந்து பெருகும் கருத்தொன்றே அணியுற முந்நூற்றுப் பதினேழு அடிகளில் விரிந்தமைந்து, பக்குவமுற்ற உயிரையும் பரம்பொருளாகிய இறைவனையுஞ் சுட்டி, இரண்

டும் அன்பின் ஆராமையால் வேற்றுமையின்றி ஒன்றுமாறு காட்டிற்று.

எனவே முடிப்புரையாக உணர்த்துமிடத்து, உயிரின் அறிவு விளக்கத்திற்கு உதவியாம் பொருட்டு அமைத்து வைக்கப்பட்ட கருவிகளாய ஐம்பொறிகள் பால்பற்று வைத்தொழுகுமியல்புடைய மனத்தை, இறையுணர்வோடு பகுத்தறிந் தொழுகலென்னும் முயற்சியில் தலைப்படும்படி பழக்கி ஆளும் மக்களுயிர்கள், இறுதியிற் பேரறிவு வாய்க்கப்பெற்று இறையருளால் பேரின்பத்தில் ஆழ்குவரென்ற உண்மை, பழந்தமிழர் கண்ட மரபாகு மென்பதை நமது உள்ளக்கிழியில் எழிலுறப் பொறித்து திருமுருகாற்றுப் படையை இயற்றிய நக்கீரரது புலமை, இறைவன் பொருள்சேர் புகழ்மைக்கோர் நந்தாமணி விளக்காம் என்பது நன்கினிது புலப்படும்,

---

★ **யாழ் நூல்.** ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது தோற்றம் பொலிந்தது,
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

—o—

கிராமங்களின் நிலை.

வித்துவான் திரு. அடிகளாசிரியர்,
(தி. ஆ. அ. தே. புலவர் கல்லூரி, கரந்தை)

"கிராமங்களிலே இட நெருக்கடி யில்லை; மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளெல்லாம் எளிமையாகக் கிடைக்கின்றன; நல்ல காற்றுண்டு; நல்ல தண்ணீருண்டு ஆகையால் மக்கள் அங்கே அமைதியாகக் காலங்கழிக்கலாம்" என்று பல அறிஞர் கூறக் கேட்டுள்ளேன். ஆனல் கிராம மக்கள் படும் அல்லலை அங்கிருந்து பழகியவரே நன்கு உணர்ந்து கூற முடியும் ஆதலின் அதனைப் பல பகுப்பாகப் பிரித்துக் கொண்டு கூறத் தொடங்குகின்றேன்.

போக்கு வரவு.

"போக்கும் வரவு மிலாப் புண்ணியன்" என்று கடவுள் கூறப்படுகின்றார். அவர் எங்கும் நிறைந்தவர் ஆதலின் அவர் போக்கு வரவு செய்யவேண்டுவதில்லை; உயிர்களாகிய நாமோ ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இன்றியமையாமல் போகவும் அங்கிருந்து வரவும் வேண்டியவராயுள்ளோம். ஆதலால் நாம் போக்கு வரவு புரிதற்கு நல்ல பாதையும் வண்டி முதலான ஊர்திகளும் அமைந்திருக்கவேண்டும். அங்ஙனம் அமையாவிட்டால் போக்கு வரவு புரியும் நாம் மிகவும் அல்லற்படவேண்டும்.

கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும் என்று எண்ணும் பொழுது, அங்குச் செல்லும் பாதைகளைப் பற்றிய எண்ணமே நமக்கு முதன் முதலில் நினைவிற்கு வருகின்றது; அப்பாதைகள் மேடும் பள்ளமும் உடையதாய்க் கல்லும் முள்ளும் நிறைந்ததாய், மணலும் சேறும் விரவியதாய், யாறும் ஓடையும் குறுக்கிடுவதாய் அமைந்திருக்கின்றன.

ஆதலால் அவ்வழிகளில் வண்டி முதலியன சென்ருல் எந்த மேடு பள்ளத்திற் குடை கவிழுமோ! எந்தச் சேற்றில் புதைந்து விடுமோ! என்றெல்லாம் கவலைகொண்டு வண்டிக்காரர் வண்டியைச் செலுத்த வேண்டியிருக்கும். சில ஊர்களுக்கு வண்டிப் பாதையே இல்லாமலிருக்கும்; அதனுல் அங்கு எத்தகையவர் சென்ருலும் நடந்தே செல்ல வேண்டியிருக்கும். சில ஊர்களுக்கு வெய்யிற் காலத்தில் மட்டும் வண்டி செல்லும்; மழைக்காலமாயின் சேற்றின் மிகுதியால் சிறிதளவும் வண்டி செல்ல முடியாமற் போய் விடும்.

போக்கு வரவு வசதியற்ற இத்தகைய ஊர்களெல்லாம் பொருளாதாரத்திலும், நாகரீகத்திலும் எப்படி முன்னேற முடியும்? காலால் நடந்து செல்பவர் 'கடலில் நீந்திச் செல்பவர் போன்று' வருந்திச் செல்லும் வழிகளையுடைய ஊர்களெல்லாம் என்று நன்னிலையடையுமோ!

ஊர்ப்புறம்.

இத்தகைய ஊர்க்குச் செல்லும் வழியினை மிகத் துன்பப்பட்டுக் கடந்தோம்; ஊரும் அண்மையில் வந்து விட்டது; உடனே ஒரு கெட்ட நாற்றம் வீசத் தொடங்கும்; அந் நாற்றம் ஊரினை நெருங்க நெருங்க அதிகமாகும் அத்தீய நாற்றம் வீச வீச ஊரும் மிக அணிமையில் வந்துவிட்டதாகக் கருதவேண்டும் ஏன்என்ருல்? ஊரில் வாழும் மக்களுக்குத் தூய்மையா யிருத்தலைப் பற்றிய அறிவு சிறிதும் கிடையாது. அதனுல் பாதையின் இருபுறங்களையும் மல மூத்திரம் கழிப்பதற்காக அம் மக்கள் பயன்படுத்துகின்றனர். அவ்வூரில் தோன்றிய எந்த அறிவாளியும் அத்தீய பழக்கத்தினை ஒழிக்க முயன்றதுமில்லை எண்ணியதுமில்லை. அரசியலாராவது சட்ட மூலமாய் இத் தீய ஒழுக்கத்தைப் போக்க முயன்றனரோ வென்ருல் அதுவும் இல்லை.

ஊர்.

இப்பாதையின் வழியாய் ஊருக்குள் நுழைந்தால் ஊர் எப்படிக் காட்சியளிக்கிறது. என்று பார்ப்போம். அழகான செய்குன்றுகள் ஊரிலும் ஊரைச் சுற்றிலும் காட்சியளிப்பனவாய் நம் நாட்டு இலக்கியங்கள் கூறும். ஆனால் ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் ஊரைச் சுற்றிலும் நாம் இன்று காணப்பெறுவன கெட்ட நாற்றம் வீசும் குப்பைக் குன்றுகளே. அக்குப்பைக் குன்றுகளிலும் பிற விடங்களிலும் மலத்தைத்தின்று மகிழ்ந்த நாயும் பன்றியும் உல்லாசமாய்த் திரிந்து கொண்டிருக்கும். தெருக்களை நோக்கினால், கூட்டிச் செப்பனிடுபவர் இல்லாமையால் குப்பை கூளங்கள் மிகுந்தும், மேடு பள்ளம் நிறைந்தும், நெருஞ்சி முதலான முட்கள் மலிந்தும் காடுபோற் காட்சி யளிக்கும்.

நீர் நிலை.

இத்தகைய ஊர்களில் ஊருணி என்று பெயர் படைத்த குளமொன்றிருக்கும். அக்குளத்தில் ஊர் வாரித் தண்ணீரும் வந்து விழும். சுற்றிலும் மரங்களை வைத்துப் பயிர் செய்து நீரும் நிழலும் ஒருங்கே அமைத்துவிட்ட தாக எண்ணி ஊர் மக்கள் மகிழ்ந்திருப்பர்.

ஆனால், அம்மரங்களின் இலைகள் விழுந்து அழுகினால் நீர் தூய்மை குறைந்து நோய்களை விளைவிக்கும் என்பதை அவர் சிறிதும் அறிந்திருக்கமாட்டார். சில ஊர்க் குளங் களில் ஆடு மாடுகளையும் குளிப்பாட்டுவார்; தாங்களும் குளிப்பார்; இன்னும் செய்யத் தகுதியற்ற செயல்களையும் செய்வார்; அவ்வூரிலுள்ள குட்ட நோய் கொண்டவனும் தன் அழுகிய புண்ணை அக்குளத்தில் தேய்த்துக் கழுவு வான்; தீராத இருமல் நோயுடையவனும் அக் குளத்து நீரில் தன்னுடைய கோழைகளைக் காறித் துப்புவான். அத்தகைய தண்ணீரை அவ்வூர் மக்கள் பழித்தொதுக் காமல் குளிக்கவும் குடிக்கவும் பயன்படுத்துவர். 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்று பிறர்க்கு நீதியும் சொல்லுவர்.

சில ஊர்களிலே கிணறுகளிருக்கும். அவற்றிற்கு கைப்பிடிச் சுவர் இருக்காது. சுற்றிலும் தளம் இருக்காது அதனால் கிணற்றின் பக்கத்திலே மக்கள் புழங்கும் தண்ணீரானது கிணற்றினுள் வீழ்ந்து கிணற்று நீரைத் தூய்மையிழக்கச் செய்யும். மக்கள் புழங்கும் நீரானது கிணற்றைச் சுற்றிக் குட்டை குட்டையாய் நின்றுகொண்டிருக்கும்; அக் குட்டைகளில் பன்றிகள் வாழும், கொசுக்கள் தோன்றிக் கொண்டிருக்கும்.

சில ஊர்களிலே நல்ல நீரோட்டமுள்ள ஆறுகள் இருக்கும். இருந்துமென்? ஆற்றங்கரையிலேதான் சுடுகாடும், புதை காடும் இருக்கும். ஆற்றிலே மல மூத்திரங்களைக் கழித்து வைப்பர். சாக்கடைத் தண்ணீரை ஆற்றிலே விடுவர். எல்லோருக்கும் குளிக்கவும் குடிக்கவும் பயன்படுகின்ற பொதுச்சொத்தாகிய தண்ணீரை நம் நாட்டு மக்கள் இப்படிப் பாழ்படுத்தி விடுகின்றமையால் இத் தண்ணீரைப் பயன்படுத்துகின்ற எல்லா மக்களும் பலவகைத் தொற்று நோய்க்கு ஆளாகின்றனர். குட்டம் இருமல் முதலான தொற்று நோய்கள் பரவுவதற்கும் நம் நீர் நிலைகளே காரணமாயிருக்கின்றன.

வீடு.

உழைப்பினைக் கருதி வெளியிடங்கட்குச் சென்ற மக்கள் ஓய்வு கருதி விடுதலை பெற்றிருக்கும் இடமே வீடாகும். இவ் வீடு நல்லமுறையில் அமைந்திருந்தாற்றான் அங்கு குடியிருக்கும் மக்கள் மகிழ்ச்சியாயிருக்கலாம். நாட்டுப்புற மக்கள் தங்கள் வீடுகளை மகிழ்ச்சிக் குரியதாய் அமைத்துக் கொள்வதில்லை. வீட்டிற்குக் காற்றோட்டமும் வெளிச்சமும் வேண்டும் என்கின்ற எண்ணம் நாட்டு மக்களுக்குச் சிறிதுமில்லை.

அவர் வீட்டிற்குச் சாளரமே அமைக்க மாட்டார். பொருள் வருவாயில் மிகவும் வறுமையுற்றிருக்கும் அம் மக்கள் ''சாளரம் வைத்தால் கள்வன் சாளரத்தினைப் பெயர்த்தெறிந்து விட்டு வந்து தங்கள் பொருளினையெல்லாம் கொள்ளையடித்துச் சென்று விடுவான்'' என்று கருதிக்கொண்டு அதனை அமைப்பதேயில்லை. வீட்டிற்குட்

சென்றால் அம் மக்களுடைய கீழ்க் காற்றும் மேற் காற்றும் தவிர வேறு எந்தக் காற்றும் அங்கு வராது. அத்தகைய வீட்டில் வாழ்பவரைக் கொசுவும், மூட்டைப் பூச்சியும் சுவைத்துக் கொண்டே யிருக்கும். அவ் வீட்டினுள் பாச்சையும் கரப்பான் பூச்சியும் வாழும்; அவைகளைப் பிடித்துத் தின்னத் தேளும் பல்லியும் குடி வரும். அம் மக்கள் மூலை முடுக்குகளின்றித் தங்கள் வீட்டை அமைப்ப தில்லை. வீடும் இருண்டு கிடக்கும். இக்காரணங்களால் எலியும் பெருச்சாளியும் ஒவ்வொரு வீட்டிலும் நூற்றுக் கணக்கில் மலிந்து வாழும். அவ்வெலியைப் பிடிக்கப் பாம்பு குடிவரும். அப் பாம்பினால் மக்கள் உயிரிழப்பதும் உண்டு.

சில வீடுகள் "அட்டகோண முனிவர் போல" கோணலமைந்த விட்டங்களையும் தூண்களையும் பெற்றி ருக்கும். ஒட்டடைகளும், பூச்சிக் கூடுகளும் கூரையி லிருந்து தொங்கிக் கொண்டிருக்கும். சில இருட்டான வீடுகளில் வௌவால்களும் துருஞ்சில்களும் குடியிருக்கும். சமையல் வீட்டுப்புகை வீடெல்லாம் பரவி வீடுமுற்றிலும் ஒரே கரியாயிருக்கும்.

சிலர் ஆடு மாடு பன்றி முதலான விலங்குகளைத் தங்கள் வீட்டினுள்ளேயே கட்டி வைத்துக்கொள்ளுகின்றனர். அவற்றின் சாணத்தை வீட்டிற்கு அண்மையிலேயே கொட்டி வைக்கின்றனர். இக் காரணத்தால் ஈக்கள் மிகுதி யாகத்தோன்ற வீடெல்லாம் ஈ மயமாகவே விளங்கும்.

உயர்ந்த குல மக்களென்று வாயளவில் தங்களைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருப்பவ ரெல்லாம் வீட்டிற்கு அண்மையிலேயே மல மூத்திரங்களைக் கழிப்பர். வீட் டைச் சுற்றிலும் குப்பை முதலானவைகளைக் கொட்டி வைத்திருப்பர். தீய நாற்றத்தினையும் நெளியும் புழுக்களை யும் உடைய சாக்கடைகளை வீட்டிற்கு உள்ளிலும் புறத்தி லும் அமைத்து அவற்றினைத் தூய்மை செய்வதைப்பற்றிச் சிறிதும் கவலையின்றி வாழ்வர். உயர்ந்த குலத்திற்குச் சிறந்த ஒழுக்கம் வேண்டும் என்பதை அவர் சிறிதும் உணர்வதில்லை.

ஊர்களிலே வீட்டுத் தோட்டத்திற்குக் குறைவிராது. ஆனால் அத் தோட்டங்களெல்லாம் குட்டிச்சுவராகவும் முள் முதலியன நிறைந்த புதராகவும் மலக்காடாகவும் பன்றி நாய்களின் குடியிருப்பாகவும் இருக்கும். நாட்டிலே உணவு பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. அக்குறையினை நீக்க வீட்டுத் தோட்டங்களில் பயன் தரும் செடி கொடிகளை வைத்துப் பயிர் செய்யலாம் என்னும் உணர்ச்சி நாட்டுப்புற மக்களுக்குச் சிறிதும் எழுவதில்லை. வீட்டின் தரை மேடு பள்ளமின்றி இராது. சுவர்களுக்குச் சுண்ணம் படித்தல் பெரும்பாலு மில்லை. எச்சிலைக் குறிப்பிட்ட விடத்திலே அம் மக்கள் துப்புவதில்லை. நினைத்த விடமெல்லாம் காறித் துப்புவர். சுவரெல்லாம் சளியினைச் சிந்திப் பூசியிருப்பர்.

உணவு.

கம்பு, கேழ்வரகு, சோளம் முதலானவற்றாற் சமைத்த கூழ்தான் நாட்டுப்புற மக்களின் பெரும்பாலான உணவாகும். ஏதாவது சிறப்பு நாட்களில் மட்டும் அரிசிச் சோற்றினை ஆக்குவர். அம் மக்களின் வாழ்க்கையில் சோற்றில் குழம்பு முதலியன ஊற்றிப் பிசைந்து பிடித்துண்ணும் வழக்கம் பெரும்பாலுமில்லை; சோற்றில் தண்ணீரை ஊற்றிக் கரைத் துண்ணும் வழக்கமே அதிகம்; ஆகையினாற்றான் அம்மக்கள் தாங்கள் உண வுண்ணுதலைச் 'சோறு குடித்தல்' 'கஞ்சி குடித்தல்' என்றே வழங்குவர். காடுகளில் தாமே முளைத்துள்ள சில கீரைகளைப் பறித்துக் கடைந்தோ அல்லது வதக்கியோ உண்பர். காய் முதலியனவற்றைத் தேடிக் குழம்பு வைத்தலோ பொரியல் செய்தலோ அம்மக்கள் வாழ்க்கையில் பெரும்பாலுமில்லை. ஏதாவது சிறப்பு நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் தாளிதம் என்பதையே அறியார், சிறந்த பலகாரங்களின் பெயரும் அவர்களுக்குத் தெரியாது. ஆண்களும் பெண்களும் பகலெல்லாம் காடு முதலானவற்றில் உழைத்து வேலை செய்வர். மாலையில் வீடு திரும்பும் பொழுது வழியோரங்களிலிருக்கும் வேலி முதலானவற்றிலிருந்து உலர்ந்த முள்களும் மிலாறுகளும் பொறுக்கி யெடுத்து வருவர்.

வீட்டிற்கு வந்து நெல் முதலானவை குற்றித் தண்ணீர் கொண்டு வந்து சோறு பொங்குவர். அப்பொழுது பசியால் மெலிந்த குழந்தைகள் சோறு சோறு என்று அழுதுக் கொண்டே யிருக்கும். அழும் குழந்தையினுடைய கண்ணீரைத் துடைப்பதற்குக் கூட முடியாதபடி அவ்வளவு கந்தையான உடையைத் தாய் தரித்திருப்பள். மிளகாயை அறைத்து புளித்தண்ணீரில் கலந்து உப்பிட்டுக் கொதிக்கவைத்த மிளகாய்ச் சாறுதான் அம் மக்களின் அன்றாடக் குழம்பாகும். இராக் காலத்தில் நிலவொளி வீசினால் எல்லாரும் வெளியில் உட்கார்ந்து உணவுண்பர். நில வில்லாத காலத்தில் அடுப்பி லெறியும் கொள்ளி வெளிச்சத் தினைக் கொண்டே உணவினை உண்பர். பகலெல்லாம் வெய் யிலில் திரிந்து வேலைசெய்கின்ற அவர்கட்குப் புளித்த நீராகரந் தான் காப்பியைவிடச் சிறந்த குடிநீராகும்.

உடை

வெள்ளையானதும் கிழியாததும் ஆகிய ஆடையினை அணிந்து கொண்டு அழுக்கேறாமல் அழகாய்த் திரிந்துகொண் டிருக்கும் பேறு நாட்டுப்புற மக்களுக்கில்லை. மண் வீட்டில் உட்காருவதாலும் காட்டுப் புறங்களில் வேலை செய்வதாலும் அவர்தம் ஆடை மிகுதியும் அழுக்கேறியிருக்கும். அதில் வியர்வை நாற்றம் வீசும். அடிக்கடி துவைத்தால் கிழிந்து விடு மென்று கருதிப் பல நாள்வரைத் தங்கள் ஆடைகளை அம்மக்கள் துவைப்பதில்லை. அக்காரணத்தால் ஏராளமான சேலைப் பேன்கள் அவர்தம் ஆடையில் வாழ்ந்துகொண்டிருக்கும். ஆண் மக்களிற் சிலர் கோவணத்துடனேயே திரிவர். இன்னுஞ் சிலர் கோவணத்துடன் ஒரு துண்டினை இடையிற் சுற்றிக் கொள்வர்.

உடல்

கதிரவன் வெப்பத்திற்குச் சிறிதும் அஞ்சாமல் பகற்காலம் முழுதும் நாட்டுப்புற மக்கள் வேலை செய்வர் அதனால் அவர் தம் உடல் கரிக்கட்டைபோல் விளங்கும். உடலுழைப்பிற்கு வேண்டிய அளவு உணவு கிடைக்கப் பெறாமையாலும், கிடைக் கும் உணவும் சத்துள்ள உணவா யில்லாமையாலும் அம்மக்கள் உடம்பு மெலிந்தே யிருக்கும். நரம்பும் எலும்பும் நன்றாகத் தெரியும். இக்காரணத்தால் அவர் தம்முள் நரம்பன், எலும்பன், பல்லன், நோஞ்சன் என்பன போன்ற பெயர்கள் வழங்கி வர லாயின.

கல்வி

பொழுது விடிவதற்கு முன்பே யெழுந்து பொழுது போகும் வரை ஒவ்வொரு குடும்ப மக்களும் வேலைசெய்ய வேண்டி யிருக் கும். அப்படி வேலைசெய்தாற்றான் வயிறு வளர்க்க முடியும். இக்காரணத்தால் பலர் கல்வி கற்க முடிவதில்லை. சிறிது இயல் பிருந்து படிக்க நினைத்தாலும் அவர்தம் ஊரில் பள்ளிக்கூடம்

இருக்காது. இருப்பினும் கடமை யறிந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர் அதில் இருக்கமாட்டார். அதனால் நாட்டுப்புறங்களில் நூற்றுக்குத் தொண்ணூற் றென்பது மக்கள் படிப்பறியாத பாமரராகவே காலங்கழிக்கின்றனர்.

முடிப்புரை

இங்ஙனம் நாட்டுப்புற மக்கள் கல்வியும் செல்வமும் இல்லாதவராய் அதனால் நாகரீகம் என்பதைச் சிறிதும் அறியாதவராய்த் தங்கள் வாழ்வினை மிகத் தாழ்ந்த முறையில் நடத்துகின்றனர். அத்தகைய மக்கள் வாழ்கின்ற நாட்டுப்புறத்திலே, எந்த விதமான வசதியும் அற்ற நாட்டுப்புறத்திலே நாகரீகமுடைய மக்கள் வாழ விரும்பாமல் மெதுவாய் நகரத்தினை நோக்கி நகர்கின்றன ரென்றால் அதில் என்ன வியப்பிருக்கின்றது? நாட்டுப்புறங்களுக்கு நல்ல சாலைகள் ஏற்பட வேண்டும். ஊர் அமைப்பு முறை நன்றாயிருக்கவேண்டும். அங்கு வாழும் மக்களைக் கட்டாயமான முறையில் கல்வி பயிலச் செய்ய வேண்டும். சிறு சிறு தொழிற்சாலைகள் அமைத்து தொழில் செய்து பொருள் தேடிச் செல்வ மடையச் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தால் நாட்டுப்புறங்க ளெல்லாம் நாடாவளத்தனவாய் விளங்கி நாடென்று சிறப்பிக்கப்படுமல்லவா?

ஊர்

பொய்யும் வழுவும் களவுங் களிமடியும்
எய்யாமை ஊரிற் கணி 1

அச்சம் கவலை சினமிழிந்த காமங்கள்
நச்சார் செறிவுற்ற தூர் 2

தீயோரை யில்லாத ஊரே தெரியுங்கால்
மாயாத தேவ ரகம் 3

சான்றவர் வாழ்கின்ற ஊரே தெரியுங்கால்
ஆன்றமைந்து வாழு மிடம் 4

அன்பு விளங்கும் அகமுடைய நல்லூரே
இன்பு விளங்கு மிடம் 5

ஒன்றென்னுங் கொள்கையார் ஊரே உலகத்துள்
என்றென்றும் வாழு மிடம் 6

நல்வழியும் நன்னீரும் பெற்ற நயனூரே
நல்வழிசேர் மக்கள் நகர் 7

இடிசுவரும் எச்சிலும் எள்பொருளு மில்லாக்
கடிமறுகே காணூர்க் கணி 8

கற்றலுங் கேட்டலு மில்லாதார் வாழிடம்
செற்றற்பேய்ச் சேர்ந்த விடம் 9

குழுவாற் பிரிந்திருக்குங் கொள்கையார் ஊரே
வழுவாற் பொலிந்த வனம். 10

தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுக் குறிப்புகள்.

வித்துவான் திரு. சி. கோவிந்தராசன், தலைமைத் தமிழாசிரியர்
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி, கரந்தை.

(க)

ஸ்ரீ இராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தாருவது நாள் இருபதினுல்! உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் தஞ்சாவூர் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத் திருமஞ்சன சாலை.... தானஞ்செய்தருளாவிருந்து பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர், நாம் எடுப்பித்த திருக்கற்றளி. ஸ்ரீ ராஜராஜீச்சரமுடையார்க்கு நாம் கொடுத்தனவும், அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும்.

(உ)

ஸ்ரீ விமானத்தின் கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிந்தருள வெட்டின யாண்டு இருபத்தைந்தாவது, நாள் முன்னூற்றெருபத்திரண்டினுல் உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் குடுத்த ஸ்ரீ பலி எழுந்தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவர் ஆடவல்லானென்னும் கல்லால் நிறை எண்ணூற்றிருபத்தொன்பதின் கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடி. நாளதினுலே குடுத்த பொன்னின் பத் மாசன ஸ்ரீ பலித்தாலம் ஒன்று மேற்படி கல்லால் நிறை தொளாயிரத்துத் தொண்ணூற்றைங் கழஞ்சரையே

நாலு மஞ்சாடி, யாண்டு இருபத்தாறுவது நாள் பதி நாலி.

(ங)

உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவாய் மொழிந் தருள இத்திருச் சுற்று மாளிகை எடுப்பித்தான் சேனாபதி சோழ மண்டலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு அமண்குடியான கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கிருஷ்ணன் ராமனான மும்முடிச் சோழ பிரம்மராயன்.

(ச)

'உடையார் ஸ்ரீ ராஜராஜீச்சரம் உடையார்க்கு ஸ்ரீ கார்யஞ் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் தான் எழுந் தருளுவித்த நம்பி யாரூரனார்க்கும் திருஞானசம்பந்த அடிக ளுக்கும் திருநாவுக்கரைய தேவர்க்கும் உடையார் ஸ்ரீ ராஜ ராஜ சோழ தேவர்க்கு யாண்டு மூன்றாவதுவரை குடுத்த தராநிலை விளக்கு ஒன்று. இருப்பு நாராசம் உட்பட நிறை நாற்பத்தொரு பலவரை'

★ **பரத சாத்திரம்.** ★

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும், பழக்குபவர் கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பக்கங்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஒழிபியல் என நான்கு இயல் களும் தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ. 1—8—0

(அஞ்சற் செலவு வேறு.)